விருப்பப்பாடம் MLNS1:1

## தொகுதி-1 தாள்-1 சங்க அகத்திணைப் பாடல்கள்

நோக்கம்: உளவியல் அடிப்படையில் அமைந்த தமிழ்க் காதலை உணர்தல் சங்ககால வாழ்வியலை அறிதல்-சங்ககால மகளிர்நிலை தெளிதல்.

பயிற்றுவிக்கும் முறை: 1. அகத்திணை மாந்தர்கள் தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய் உள்ளிட்டோர் கூற்றுக்களுக்குச் சான்றாக ஐந்து ஐந்து பாடல்களை விளக்கிக் காட்டல்.

2. உவமை, உள்ளுறை, இறைச்சி உள்ளிட்ட உத்திகளுக்குச் சான்றாகச் சில பாடல்களை விளக்கிக் காட்டல்

3. வரலாற்றுக் குறிப்பு, புராணச் செய்திகள், இடம் பெற்ற பாடலகளைச் சுட்டிக்காட்டல்.

அலகு-1 – அகத்திணை விளக்கம்-களவு, கற்பு, கைக்கிளை, பெருந்திணை ஆகிய அகத்திணைக் கோட்பாடுகள், அகத்திணை பாடிய புலவர்களில் கபிலர், பரணர், நக்கீரர், போன்ற சிறப்புக்குரிய புலவர்கள்-பாடல் தொடர்களால் பெயர் பெற்ற புலவர்கள்.

அலகு-2 – கூற்றுமுறைகள்-முதல், கரு, உரி போன்ற கூறுகள் – உள்ளுறை, இறைச்சி போன்ற உத்திகள், உவமை போன்ற அணிகள்.

அலகு-3 – அகத்திணை மாந்தர்: தலைவன்-தலைவி, தோழி முதலியோர் உறவும் தொடர்பும்.

அலகு-4 – அகத்துறைப் பாடலகளில் வரலாற்றுச் செய்திகள்-வாழ்வியல் ஒழுகலாறுகள்-தொன்ம ஆட்சி-போன்றன.

அலகு-5 – அகப்பாடலகளும் உளவியலும்.